**நீதித்துறை நடுவர் எண்.1நீதிமன்றம், இராமநாதபுரம்**

**முன்னிலை :** திரு.N. நிலவேஸ்வரன், B.A., B.L.,
நீதித்துறை நடுவர்எண்.1,
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கட்கிழமை

**Crl.M.P.No.271/2026**

**CNR .TNRM No.02-000808-2026**

மகேந்திரன் (எ) மாந்தா, வயது 30
த/பெ. மலைக்கண்ணன்,
வாலாந்தரவை,
இராமநாதபுரம்.

. . . மனுதாரர் /எதிரி

-- எதிராக --

அரசுக்காக சார்பு ஆய்வாளர் அவர்கள்,
பஜார் காவல் நிலையம்,
குற்ற எண்.08/2012

. . . எதிர்மனுதாரர் / அரசு
குற்ற முறையிடுபவர்

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரர்/எதிரி பிணையில் விடுவிக்ககோரி BNSS 480-ன் கீழ் 10.03.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட இப்பிணை மனு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சண்முகநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்களின் பதில் மனு தாக்கல் செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

இந்த மனுதாரர்/எதிரி மீது பஜார் காவல்நிலைய குற்ற எண்.08/2012, சட்டப்பிரிவுகள். 294(b), 323, 324, 506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :-**</u>

இந்த மனுதாரர்/எதிரி மீது பஜார் காவல்நிலைய குற்ற எண்.08/2012, சட்டப்பிரிவுகள். 294(b), 323, 324, 506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்த மனுதாரர்/எதிரி கடந்த 09.03.2026ம் தேதியன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் இந்த மனுதாரர்/எதிரி எந்த விதமான குற்றமும் புரியாதவர் என்றும், கடந்த 8 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும் வாதிட்டார். மேலும், எதிரியை பிணையில் விடுவிக்கும் பட்சத்தில் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பார் என்றும் வாதிட்டார். மேலும், எதிரிக்கு பிணையம் அளிக்க பிணையதாரர்கள் தயாராக உள்ளார்கள் என்றும் எதிரியை பிணையில் விடக்கேட்டுக்கொண்டுள்ளார் என்று வாதிடப்பட்டது.

<u>**அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் :-**</u>

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனுவின் பேரில் அரசுத்தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. அந்த பதிலுரையில் எதிரியை பிணையில் விட்டால் மீண்டும் இதேபோன்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும் பார்வையில் காட்டப்பட்டுள்ள வழக்கின் வாய்தாவிற்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**தீர்வு :-**</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் மனு மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டது. முடிவில், இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் அரசுத்தரப்பு ஆட்சேபனைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும்பொழுது, இம்மனுதாரர்/எதிரி மீது கடந்த 10.01.2012-ம் தேதியன்று வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி வழக்கானது தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளதை கருத்தில்கொண்டும், மேலும் இவ்வழக்கின் எதிரி 09.03.2026ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் உள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி எதிரி/மனுதாரரின் குடும்ப பொருளாதார சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரியை பின்வரும்

நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுவதால் எந்த வகையிலும் பாதிக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேற்காணும், பரிசீலனை அடிப்படையில் எதிரியை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விட இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**நிபந்தனைகள்**

1. எதிரி தனக்காக இரு பிணையதாரர்களும் தலா ரூ.10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

2. வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு எதிரி பிணையில் வெளிவந்த நாள் முதல் பஜார் காவல்நிலையத்தில் தொடர்ந்து 30 தினங்களுக்கு காலை 10.00 மணிக்கும் முன்னிலையாகி கையொப்பம் செய்து வரவேண்டும்.

3. எதிரி பிணையில் வந்த பிறகு எந்தவொரு குற்ற வழக்கு சம்பவத்திலும் ஈடுபடக்கூடாது.

4. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு அழைக்கும்போது எதிரி தவறாமல் ஆஜராகவேண்டும்.

5. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரும் போது எதிரி தவறாமல் ஆஜராக வேண்டும்.

இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.16 14:38:28 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.